காஞ்சி

விலை 20 காசு

22-10-67

தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்

எஸ். பி. பச்சையப்பன், சங்கராபுரம்.

எம். சண்முகம், விழுப்புரம்.

என். இராசாங்கம், குறிஞ்சிப்பாடி.

காஞ்சி

3-ம் ஆண்டு மலர்!

அறிஞர் அண்ணா

அவர்கள் எழுதும்

முப்பாலும் முக்கனியும் கலந்த முத்தமிழ்க் காவியங்கள்!

இயலில்-இசையில்-கூத்தில் கலந்தவை! கட்டுரைகள்!

அத்துடன்

அமைச்சர்கள்

முன்னணித் தலைவர்கள்

தரும் அரசியல் விளக்கங்கள்!

கவிதைகள்! கார்டூன்கள்! துணுக்குகள்!!

எல்லாமாகச் சேர்ந்த

இலக்கியத் தொகுப்பு! எழிலான படைப்பு!!

அக்டோபர் இறுதியில் வெளிவருகிறது!

விலை ஒரே ரூபாய்தான்!

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 22—10—67 இதழ் 13

காங்கிரஸ் திருந்துமா?

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைக்குப் பாடுபட்ட கட்சி என்ற விருது பெறுவதற்குக் காங்கிரஸ் கட்சி முனைந்து முந்தி வரும்போது, அதனைத் தடுத்து நிறுத்த வேறெந்த அரசியல் கட்சியும் தயாராக இல்லை; அது தேவையுமில்லை.

சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சி முழு மூச்சாக ஈடுபட்டிருந்தது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, அந்த இயக்கத்தின் பின்னால் கட்சியைச் சாராத பொதுமக்களின் ஆதரவு திரண்டிருந்தது என்பதும்!

பொதுமக்கள் ஆதரவு, ஒரு நல்ல காரியத்துக்காகத் தங்களுக்குக் கிடைத்தது என்ற ஒரே ஒரு காரணத்தால் மட்டும் அவர்கள் அத்தனைப் பேரும் அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்றோ அந்த இயக்கத்துக்கு உரியவர்கள் என்றோ பொருள் கொண்டுவிட முடியாது.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் வழிகாட்ட, நடை பயின்றுவந்த திராவிடக் கழகமும், கம்யூனிஸ்டுகளும்கூட அந்த போராட்ட இயக்கத்துக்குத் தங்கள் பேராதரவைக் காட்டி இருக்கிறார்கள். வெள்ளையர் வெளியேறிய நாளை, துக்க நாள் அல்ல—மகிழ்ச்சிக்குரிய நாள் என்று எடுத்துக் காட்டியவர் அறிஞர் பெருந்தகை அவர்கள். உடைபட்டுப் போகாத அன்றைய கம்யூனிஸ்டுகள் சிறைவாழ்க்கை அளவுக்குக் கூடப் போயிருக்கிறார்கள்!

பிற பல கட்சிகள் சுதந்திர வெற்றிக்குப் பிறகு பிறந்து வளர்ந்து கொண்டிருப்பவைகள்.

ஆனால், சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர்கள்—அந்த தியாகத்துக்குத் தங்கள் உடல், பொருள் அனைத்தையும் ஆகுதி தந்து, அரும்பாடுபட்ட புனிதச் சீலர்கள் பெரும்பாலோர் இன்றில்லை, தாங்கள் கட்டி வளர்த்த கட்சி எந்த அளவுக்கு அராஜகத் தன்மையில் ஊறித் திளைத்துவிட்டது என்பதைக் கண்டு வெட்கித் தலை குனியவும், விசாரப்பட்டுக் கண்ணீர் வடிக்கவும்!

'காங்கிரஸ்' என்ற பெயர் இருக்கிறது என்பது உண்மை! அதன் தூண்களில் பல சரிந்துவிட்டன! பல தவித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சில ஒண்டவும் ஒதுங்கவும் இடமில்லையே என்ற குமுறலையும் கொட்டுகின்றன. சில குமைந்து கொண்டும் கிடக்கின்றன.

காங்கிரஸ் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிறுவனத்தின் உண்மை நிலை இன்றைக்கு இதுதான்.

கறையான் புற்றெடுக்க, அதில் இன்று கருநாகங்கள் புகுந்துகொண்டு புற்றுக்கே ஊறுண்டாக்கத்தக்க விதத்தில் செயல்படத் தொடங்கியுள்ளதன் எதிரொலி, இந்தியத் துணைக்கண்டத்தில் இன்றைக்கு என்னதான் நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிய முடியாததாக மட்டுமல்ல — நாளைக்கு இந்தியாவின் நிலை என்னவாகும்? எப்படி இருக்கும் என்று அரசியல் பார்வையாளர்களால்கூட, கணித்துக்கூட கூறமுடியாத அவலம் தோன்றி இருக்கிறது! அழுதாலும் தீராத அவலம் இது! அடங்கிப் போனாலும் தீராத அவலம்!

சுதந்திரத்துக்குப் பாடுபட்ட கட்சி என்ற ஒரே ஒரு தகுதியை மட்டும் வைத்துக்கொண்டு, அதிலும் அதன் முக்கியஸ்தர்கள் பலரையும் விழுங்கிக்கொண்டுவிட்டு—உண்மை உழைப்பாளிகள் பலரை கண்கலங்க வைத்துவிட்டு—ஒட்டை உடைசல்கள் சில, துணைக் கண்டத்தை, அயல் நாடுகள் ஐயக்கண்ணோடு காணத்தக்க விதத்தில் அழைத்துப் போகின்ற நிலைமை — எதிர்காலத்தை எண்ணும் அச்சத்தைத் தோற்றுவிக்கிறது!

தேர்தலுக்குப் பின்னால், இந்தியத் துணைக்கண்டத்தில் பல மாநிலங்களில் காங்கிரசின் சர்வாதிகார வெறித்தனம் சாய்க்கப்பட்டது!

இன்றைய காங்கிரஸ், உண்மையிலே விடுதலைப் போராட்டக் காலத்து உணர்வில் இயங்குகிறது என்பதனை மெய்ப்பிப்பதானால் அது என்ன செய்திருக்க வேண்டும்? ஜனநாயக உணர்வு தங்களுக்கும் உடன்பாடுதான் என்பதனை, காங்கிரஸ் ஒப்புக்கொள்கிறதென்றால், அதன் நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டும்?

ஆட்சிப் பொறுப்பிலிருந்து தங்களை மக்கள் விரட்டிவிட்டார்கள் என்கிறபோது, தாங்கள் ஏதோ தவறு செய்திருக்கிறோம்; மக்களுக்குப் பிடிக்காத—மக்கள் ஏற்காத எதனையோ செய்திருக்கிறோம்! அது எது? என்பதனைக் கண்டறிந்து, திருத்திக்கொண்டு, மக்களது மனதை நாணயமான—நடுவன்மையான முறையில் மாற்ற முயற்சித்திருக்க வேண்டும்! நடக்கிறதா இன்று?

மணிப்பூர் மாநிலத்தில் காங்கிரஸ்தான் தேர்தலுக்குப் பிறகு அமைச்சரவை அமைத்தது. கடந்த கிழமை அதன் நிலைமை என்ன? காங்கிரஸ் கட்சி கவிழ்க்கப்பட்டு ஐக்கிய முன்னணி பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. விட்டார்களா அது ஒழுங்கோடு இயங்க! விபரீத விளையாட்டிற்குக் கால் கோலி இருக்கிறது அங்கே!

உத்திரப் பிரதேசத்தின் கதை என்ன? கூட்டணி ஆட்சி! காங்கிரசின் அராஜகத்தனம், தலையீடு — அதனால் சல சலப்பு!

மத்தியப் பிரதேசத்தின் செய்தி எப்படி? ஊழல் குற்றச்சாட்டுகள்—எதிர்க்குற்றச்சாட்டுகள்! சல சலப்பு.

மேற்கு வங்கத்தில், கேரளாவில் இங்கெல்லாம் உதைபந்து விளையாட்டு!

தமிழகத்தில் மட்டுமென்ன! இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிக மிக மிக மிக அமைதியாக இருக்கிற ஒரே ஒரு மாநிலம் தமிழ் நாடுதான்!

இதுவும் அமைதி வழியில் செயல்பட காங்கிரஸ்காரர்கள் விடுகிறார்களா? எதிர்க்கட்சி என்பதற்கு ஏதும் இலக்கணங்களில்லையா! இயங்குகிறார்கள், சட்டத்தையும் அமைதியையும் பாழாக்கும் விதத்தில்!

எனவே நாடெங்கிலுமுள்ள காங்கிரசுக்காரர்களுக்கு — பொதுவாக நாட்டு மக்கள் நல்வாழ்வுமீது நம்பிக்கை இல்லை. பதவிச் சுவை அவர்களை அப்படி ஆட்டிப்படைக்கிறது. இதே போக்கில் இனியும் காங்கிரஸ் செயல்படுமானால் அந்த இயக்கம் பற்றிய செய்திகளைப் பழங்கால ஏடுகளில் தேடிப்பார்க்க வேண்டியதாகத்தான் இருக்கும்! திருந்தும் என்று எதிர்பார்க்க முடியுமா? எதிர்பார்க்கலாமா?

தொல்லை குறைப்போம்!

— மதி —

அன்புள்ள நண்பா!

அக்டோபர் திங்கள் 13-ம் நாள். செங்கை மாவட்டத்தில் காஞ்சிபுரத்தை அடுத்த பழையசீவரத்திலிருந்து குறுக்கே ஓடும் பாலாற்றில் தரைப்பாலம் ஒன்றைத் திறந்து. அக்கரைக்கு—திருமுக்கூடலுக்குச் செல்லும் தாம்போதியைத் திறந்து வைக்கிறார்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்.

24 அடி அகலமும் 3300 அடி நீளமும் உள்ள பாதை அது. பாலத்தின் முகப்பில் ஒரு நாடா கட்டப்பட்டிருக்கிறது; அறிஞர் அண்ணா அவர்களது கையில் சிறிய கத்தி ஒன்று கொடுக்கப்படுகிறது. அதனை நோக்கி நகர்கிறார்கள் அண்ணா அவர்கள்.

நான்?

அந்தக் காட்சியைக் காண்கிறேன்!

என் நினைவுகள், தேர்தலுக்குமுன்னர் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களோடு தேர்தல் சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்டிருந்ததையும் அங்கங்கே நிகழ்ந்த சில சம்பவங்களையும் பற்றி அசை போடத் தொடங்கியது.

சேலம் மாவட்டம். நள்ளிரவுக்கு மேலாகிவிட்டது. ஒரு ஊரில் பெருங்கூட்டத்தை முடித்துக்கொண்டு அடுத்த ஊர் செல்ல காருக்குள் ஏற வருகிறார்கள் அறிஞர் அண்ணா அவர்கள்.

முஸ்லிம் நண்பர் ஒருவர் வருகிறார். அறிஞர் அண்ணா அவர்களை அன்போடு விளிக்கிறார். அடுத்த ஊர் கூட்டத்திற் கிடையிலே புதிதாக ஏற்பாடு செய்துவிட்டிருக்கும் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று 'வம்பு' செய்கிறார்!

காலம் கடந்துவிட்டதை நினைவுபடுத்தியும் தோழர் ஒப்புக்கொள்ளவில்லை; வந்து மேடையில் ஏறி நின்றுவிட்டுப் போய்விட்டால் போதும் என்கிறார்! கடைசியில் அவரே வெற்றி பெறுகிறார்!

அவரும் வண்டியில் ஏறுகிறார், பாதை காட்டி வர! அவர் காட்டும் பாதையில் அறிஞர் பெருந்தகை அவர்களது கார் போய்க் கொண்டிருக்கிறது!

கார் போய்க்கொண்டே இருக்கிறது அவர் காட்டும் பாதையில்! 'அண்ணா!' நண்பர் மெள்ள அழைக்கிறார்.

'இங்கு ஒரு ஆற்றைக் கடக்கவேண்டும். நீங்கள் வண்டியிலேயே இருங்கள் நாங்கள்...'

இருளில் இருந்தபடியே அண்ணா அவர்கள் நண்பரது முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறார். புன்னகை படர்ந்த அண்ணா அவர்களது முகத்தை இருட்பாவி, சரியாக எடுத்துக் காட்டவில்லை.

ஓடிக்கொண்டிருந்த வண்டி சட்டென்று சரிவாக ஓடி நின்றுவிடுகிறது.

பொதுப்பணித் துறை அமைச்சர் கார் விபத்திற்கு ஆளாகியபோது, தானும் விபத்துக்கு ஆளான டிரைவர் பாண்டி. அந்த பயணத்தில் அண்ணாவின் காரை இயக்கி வருகிறார்!

வண்டி நின்றதும் பாதை காட்ட வந்த நண்பர், 'இங்கே காரைக் கொஞ்சம் தள்ளினால் எளிதாக அக்கரையைக் கடந்துவிடலாம்...நாங்கள் தள்ளுகிறோம்' என்று சொல்லிக்கொண்டே வண்டியிலிருந்து இறங்குகிறார்.

'நாங்கள்' என்று பன்மையில் கூறினாரே! அவர் மட்டும்தானே இறங்குகிறார்? அப்படியானால் 'பன்மை'யின் பொருள்?

சிந்திக்க நேரமில்லை—நானும் இறங்கி காரைத் தள்ளத் தொடங்கினேன். முழங்கால் அளவு நீர், நள்ளிரவு நேரம்; சில்லென்ற குளிர்காற்று. காட்டுப் பாதை!

யாரோ ஒரு ஏழைப் பாட்டாளி, அந்த நள்ளிரவு நேரத்தில் தன் வயிற்றைக் 'கழுவிக் கொள்ள' என்ன வேலை செய்துவிட்டுத் திரும்புகிறாரோ! கையில் ஒரு 'லாந்தர்' விளக்கு!

நாங்கள் வண்டியைத் தள்ளிக்கொண்டிருக்கும் போது எங்களை அவர் கடக்கிறார்.

கடந்தவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, நின்று திரும்பி, வண்டியின் பக்கம் பார்த்து லாந்தரை உயர்த்துகிறார்! கரங்கள் தானாக குவிகின்றன!

'அண்ணா' என்று அழைக்க வாய் திறக்கிறார்! ஒலி வெளிவரவில்லை—ஓடிப்போய் லாந்தரை' ஒரு பக்கத்தில்—தரையில்தான், வைத்துவிட்டு தானும் அந்தக் காரைத் தள்ளுகிறார்.

அரும்பெரும் பாட்டுக்கு அப்புறம் வண்டி மறுகரை போகிறது! இவ்வளவுக்கும் அது ஒரு பாலம்! அறிஞர்

(13-ம் பக்கம் பார்க்க)

நேரில் இல்லாதவன்!

அவர் நேரில்தான் நான் இல்லையே தவிர அவர் நெஞ்சிலும் நான் நிற்க முடியாதா! இதுதான் உலகமா? நான் என்ன படித்திருந்து என்ன பிரயோசனம்? ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பார்கள். அந்தக் கதைதான். உலக உத்தமர்கள் எழுதிய தத்துவங்கள் வேதாந்தங்கள் அத்தனையும் படித்தேன். புத்தகங்களின் இடையே என்னை வாழ அனுமதித்தேன். அந்த புத்தகங்கள்தான் அவரை என்னிடம் அறிமுகப்படுத்தியது.

ஆம், சுந்தர் அடிக்கடி பல்கலைக் கழக நூல் நிலையத்திற்கு வருவார். நானும் போவேன். புத்தகங்களில் உள்ளவைகளை நானும் படிப்பேன் அவரும் படிப்பார். நூல் நிலையம் மூடும் வரை படித்துக் கொண்டே இருப்போம், நூல் நிலையத்துக் காவலர் வந்து, நேரம் கடந்துவிட்டது. நூல் நிலையத்தை பூட்டப் போகிறோம் என்று சொல்லும்போதுதான் நாங்கள் வெளியே வருவோம். முதலில் சில நாள் வெளியே வந்தவுடன் நாங்கள் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் பஸ் ஸ்டாப்பில் நிற்போம். 21 பி வண்டி வரும் வரை எத்தனையோ நாட்கள் தனித்தனியே உணர்வற்ற மரங்களைப் போல் பேசாமல் நின்றிருக்கிறோம். பஸ் வந்ததும் இருவரும் பஸ்ஸில் இடம் பிடிப்போம். அவர் ராஜா அண்ணாமலை புரத்தில் ஓஷியானிக் ஓட்டல் அருகே இறங்கிவிடுவார். நான் அடையாறு அருகே இறங்கிவிடுவேன். எப்படியோ எங்கள் பழக்கம் பேச்சளவில் ஆரம்பித்துவிட்டது.

நூல் நிலையத்திற்குப்போய் வருவதிலே நிம்மதி கண்ட என் மனம், அவருடன் பழக்கம் ஏற்பட்ட பிறகு நூல் நிலையத்தில் பல புத்தகங்களைப் படிப்பதிலே கண்ட அமைதி எல்லாம் போய் அவரைக் காண்பதிலே அவரைப்பற்றி நினைப்பதிலே எனக்கு நிம்மதி ஏற்பட்டது. பல்கலைக் கழக நூல் நிலையம் எங்கள் காதல் உணர்வுக்கு அடி கோலிய கோயில் என நான் நினைத்தேன். அவர் இதைப்பற்றி என்ன அபிப்பிராயம் சொல்கிறார் என்பதைவிட அவர் மனம் எதை நாடுகிறது? அவர் எப்படிப்பட்டவராக இருக்க முடியும்? அவர் பழக்கத்திற்கு நல்லவராகத் தெரிகிறார்; இருந்தாலும்......வாழ்க்கைக்கு உற்ற துணைவராக அமைய வேண்டுமே! அதற்காகத்தான் பல கேள்விகளை—பல விளக்கங்களைத் தெரியாதவளைப்போல கேட்பேன். அவர் சொல்வதைக் கூர்ந்துகவனிப்பேன்.

வேதாந்தங்களைப் பற்றிய விளக்கங்களை ஒருநாள் அவரிடம் கேட்டேன், அவரோ வேதாந்தம் உங்களுக்கு இந்த இளவயதில் பிடிக்கிறதா? என்றார்.

ஆமாம் தவறா? என்றேன்.

தவறில்லை..........வாழ்க்கையை வெறுத்தவர்கள், அனுபவத்தில் முதிர்ந்தவர்கள், வாழ்க்கையில் சிக்கல் பல அனுபவித்தவர்கள்தான்

கஸ்தூரி நடராசன்

வேதாந்தங்களைப் பற்றி அறிய முற்படுவர், அது உங்களுக்குத் தேவை இல்லை என்றார். நானோவிடவில்லை. அப்படியானால் அதை நான் அதிகம் விரும்புகின்றேன் என்றேன். அப்படியானால் உங்களுக்கு வாழ்க்கையில் ஏதாவது தொல்லையா? என்றார். தொல்லை வந்தால் தாங்கிக்கொள்ளலாம் அல்லவா என்று சாமார்த்தியமாகப் பேசி முடித்தேன். அதற்கு வேதாந்தம் தேவையில்லை; பக்குவப்பட்ட மனம் இருந்தால் போதும் என்றார். பக்குவப்பட்ட மனம் அடைய வழி? என்றேன் நான். அறிவு வழி நடக்க வேண்டும் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படக் கூடாது என்றார்.

''தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு வாழவேண்டும்'' என்று சொல்கிறீர்கள் அப்படித்தானே என்றேன்.

அதற்குத்தான் முதலிலேயே சொன்னேன், வேதாந்தம் என்பது வாலிப உள்ளங்கள் ஏற்க மறுக்கும் மருந்தென்று, ஆக உங்கள் எண்ணத்தை இப்போது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்றார்.

என்ன எண்ணம்? என்றேன் அமைதியாக. வயதுவந்தவர்களுக்கு உடல் அளவில் ஒரு துணை வேண்டும். வாலிப உள்ளங்களுக்கு மனத்தளவில் தக்க ஒரு துணை வேண்டும் இதுதான் உலகம்; இதுதான் இயற்கை என்றார்.

அவர் பேச்சில் ஒரு கனிவை, என் பதினாறு...வயது வரை நான் காணாத ஒரு புதுமையைக் கண்டேன் அன்று. ஆனால் என் மனம் ஏனோ தவறு செய்ய முன்வரவில்லை. பாழாய்ப் போன புத்தகங்களில் படித்த சில பொன் மொழிகள் என் நினைவிற்கு வந்தன. அதனால்தான் என் அபிப்ராயத்தை என் சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை. ஆனால் உங்கள் பழக்கம் எனக்கு ஏதோ ஒரு நிம்மதியைத் தருகிறது. உங்கள் பழக்கம் நீடிக்குமா? என்றேன். அவரும் என் மனமும் அப்படியொரு நிம்மதியை அடைகிறதென்றார். அவர் பதிலில் நான் பெற்ற நிம்மதி, அப்பா......இப்பொது நினைத்துப் பார்த்தால்கூட எனக்கு ஒரு தனி அமைதி கிடைக்கிறது. எனக்கென்று ஒரு நெஞ்சு அதற்கென்று ஒரு எண்ணம், அத்துடன் வாழ்ந்து வந்த என் வாழ்வு மாறி இனி அவருக்காக, அவர் நெஞ்சத்திற்காக, அந்த நெஞ்சத்தின் நிம்மதிக்காக நான் வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன்.

என்னுடன் காதல் உணர்வு ஏற்படுத்திக் கொள்ளத் துடித்த அவரின் மன நிலையை என்னால் உணர முடிந்தது. பாவம்......அவர் உள்ளம்தான் எத்தனை எத்தனை இன்பக் கோட்டைகளைக் கட்டி இருந்தது. நான் ஒரு பெண். நான் அவருக்கு அளிக்க நினைத்திருக்கும் நிம்மதி ஏன் எதற்கென்று எனக்கே புரியவில்லை. என் மனம் ஏன் அவரை நாடவேண்டும்? அவரைக் காண்பதிலே ஏன் ஒரு புது நிம்மதியைக் காணவேண்டும்? அதற்குத்தான் காதல் என்று பெயர் வைத்

தார்களா? காதலுக்கு இவ்வளவு பெரிய சக்தியிருப்பதே எனக்கு இப்போதுதான் தெரிகிறது. வள்ளுவர். சொல்வதைப்போல காதல் ஒரு புது விதமான நெருப்புதான். நீங்கினுல் சுடுகிறது நெருங்கினுல் குளிர்ச்சியைத்தருகிறது. ஒவ்வொன்றும் அனுபவ பூர்வமாக வரும்போது தான் உண்மை புலனுகிறது!

புத்தகங்கள் என் அறிவை வளர்த்துவிட்டது என்று ஏமாந்து போய்விட்டேன். நான் வளர்ந்து விட்ட பெண்தானேயொழிய காணப்படும் உலகம் வேறு. அறியப்படும் உலகம் வேறு என்ற உண்மை எனக்குத் தெரியாமல் போய்விட்டது. என் உடலில் இருந்த வனப்பைவிட அறிவு வனப்புப் பெறவில்லை என்பதை என்னுல் இப்போது உணர முடிகிறது. அவரை எனக்கு உரியவராக்கிக் கொள்ள தவறிவிட்டேன். அவருடன் பேசும் போது நான் அடைந்த மகிழ்ச்சியை இப்போது நினைத்துப் பார்த்தால்கூட உடல் அத்தனையும் ஒரு புல்லரிப்பு ஏற்படுகிறது. பேசுவதற்கு எத்தனையோ இருந்தது. அதையெல்லாம் பேசி இருக்கலாம். நல்ல உல்லாசத்தைப் பெற்றிருக்கலாம். பல புத்தகங்களைப் படித்தவள் என்ற எண்ணத்தில் ஒரு நாள் கடற்கரையில் வான வீதியில் நிலவு மங்கை தன் பட்டொளியைப் பாரெங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர் எதிரில் நான் ஆசிரியன் முன்பு மாணவியைப் போலல்ல அகநானூற்றுத் தலைவி போல அகமும் புறமும் மலர எதை எதையெல்லாமோ பேசிக் கொண்டிருக்கும் போது நேரில் இல்லாத ஒருவரைப் பற்றி நினைவில் வைத்துக் கொள்வதென்பது முடியாத காரியம்; அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்றேன்.

கண்களை ஏமாற்றலாம், கருத்தை ஒருக்காலும் ஏமாற்ற முடியாதென்ருர்.

நீ சொல்வது யாரோ ஒரு ஆங்கிலேயர் Out of Sigh', Out of mind என்று சொன்னதின் மொழி பெயர்ப்பு அது. அப்படியே எல்லாவற்றிற்கும் பொருந்தாதென்ருர்.

நானே விடவில்லை, உங்கள் உறவினர் எத்தனைபேர் வெளியூர்களில் இருக்கின்ருர்கள். அவர்கள் உங்கள் பார்வைக்கப்பால்தானே இருக்கின்ருர்கள். அவர்களைப்பற்றிய நினைப்பு உங்களுக்கு இருப்பதில்லையல்லவா? என்றேன்.

கண்களுக்குப்பால் இருப்பது உண்மைதான்......ஆனுல் தேவைப்படும்போது அவர்கள் மனக்கண் முன் வருவார்கள் என்ருர்.

அப்படியில்லை. பார்வையில் இல்லாவிட்டால் நிச்சயமாக மனதைவிட்டு நீங்கிவிடுவார்கள். அதில் எனக்கு நிரம்ப நம்பிக்கையிருக்கிறதென்றேன்.

அவரோ, உனக்குத் தெரியாது, பழக்கப்பட்டுப்போன இரு உள்ளங்களை, உதாரணத்திற்கு உன்னையும் என்னையுமே வைத்துக்கொள்ளேன். இருவரும் இன்று பழகுகிருேம். நாளை பிரிகிருேம் என்று வைத்துக் கொள் — உன்னுல் என்னை மறந்து விட முடியுமா? என்ருர்.

ஓ...முடியுமே—கொஞ்சநாள், சில வேளைகளில் உங்கள் நினைவு என் மனதை வாட்டலாம். ஆனுல் நாள் செல்லச்செல்ல மறந்துவிடுவேன். அதுதான் இயற்கை என்றேன்.

நிர்மலா, நீ புரிந்துகொண்ட உலகம் அவ்வளவுதான் என்பதை என்னுல் இப்போதுதான் உணர முடிகிறது. காதல் கவிதைகள், கதைகள் எத்தனையோ படித்திருப்பாய். காதல் மிக வலிமை வாய்ந்தது. சில சாம்ராச்சியங்களையே அழிக்க வல்ல, ஆற்றல் பெற்ற ஒன்ருய் இருந்தது. இருக்கின்றது இருக்கும். ஆக, காதல் உலகத்திற்கு அது பொருந்தாத மொழி என்ருர்.

உலகில் கூடுகின்ற காதல் உள்ளங்கள் அத்தனையுமா ஒன்று கூடிவிடுகின்றன? நடைமுறைக்கு வர முடியாமற்போன காதல் உள்ளங்கள் எத்தனையோ. உலகின் ஒவ்வொரு மூலையிலும் உறங்கி உணர்வற்றுக் கிடக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட காதல் உள்ளங்களுக்கு இந்த பழமொழி சாந்தி தருமல்லவா? என்றேன். ஆக, உன் முடிவு நேரில் இல்லாதவர் நினைவில் நிலைப்பது கடினம். அதுதானே என்ருர்.

கடினம்—இல்லை, நெஞ்சில் நிலைக்கவே முடியாதென்று வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசி விட்டேன். அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை, சரி, மணி ஒன்பது ஆகிவிட்டது புறப்படு என்ருர். அப்போது என்மனம் எனக்கு எதையும் உணர்த்தவில்லை. பேச்சுதானே என்று நினைத்தேன். என்னை அன்று கடற்கரையில் பஸ் ஏற்றியவரை இன்றுவரை தேடுகிறேன் தேடுகிறேன்......தேடிக் கொண்டேயிருக்கிறேன்.

நேரில் இல்லாதவர் நினைவில் நிற்கமுடியாது என்ற என்வாதம் அவர்மனதைப்புண்படுத்திவிட்டது. நான் அவரை மறந்துவிடுவேன் என முடிவு எடுத்துவிட்டார். என் அறிவின்மீது உறுதியின்மீது நம்பிக்கையிழந்துவிட்டார். மனச்சாட்சி உள்ள பெண் உள்ளத்தால் நிச்சயமாக மறக்கவே முடியாது, என்ற பதிலை அவர் சொல்லியல்ல, அவர் என்னைவிட்டுப் பிரிந்து, என்பார்வைக்கு அப்பால் வெகுதூரத்தில், எங்கோ மறைந்து நின்றுகொண்டு, என் நெஞ்சத்திற்குச் சரியான பாடம் புகட்டிக்கொண்டிருக்கிருர்.

பல்கலைக் கழகத்து வாயிலில் நான் அப்போதெல்லாம் நுழையும் போதே நூல் நிலையத்தில் அமைந்த இரண்டாவது சன்னலின்மீது கண் வைத்தவாறே செல்வேன். ஆம், அங்கேதான் அவர் வழக்கமாக அமர்வார். என் கண்களுக்கு அப்போதெல்லாம் ஏமாற்றமே இருக்காது. நிச்சயம் அவர் அங்கே இருப்

(12-ம் பக்கம் பார்க்க)

விரைவில்! **புதிய தொடர்கதை!**

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

'கண்ணுத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

பாண்டியன் திருமேனி

கே. ஜி. இராதாமணாளன்

3—25
தமிழே! ஒளியே! வாழி!

'ஆ!' என்று அலறியபடி சோலையப்பன் கீழே உட்கார்ந்துவிட்டான். அவன் காலில் பெரியதொரு கருவேலம் முள் தைத்துவிட்டிருந்தது. அவசரமாக அந்த முள்ளை இழுத்தான். பாதத்தினுள்ளே அது பாதி உடைந்துவிட்டு பாதிதான் வெளியே வந்தது.

அதைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் உடனே துள்ளி எழுந்தான், மாந்தோப்பினுள் தூமகேது ஓடிக்கொண்டிருப்பது, அவனுக்குத் தெரிந்தது. முள் தைத்து இரத்தம் கசிந்த காலை இழுத்துக்கொண்டு, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

தூமகேது பருத்த தன் உடலைத் தூக்கிக்கொண்டு அவ்வளவு வேகமாக ஓடுவான் என்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

ஓடிக்கொண்டிருந்த அந்த ஒற்றர் நாயகம் மூச்சுத் திணறவே ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தான்.

தூரத்தில் சோலையப்பன் நொண்டிக்கொண்டு ஓடி வருவதைக் கண்டதும், நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

ஊரினுள்ளே புகுந்து ஓடினால், தனக்கு எதிராக இருப்பவர்களெல்லாம் ஒன்றாகக் கூடிக்கொண்டு துரத்திப் பிடித்து, தன்னைச் சித்திரவதைசெய்து, கொன்றுவிடுவார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான் ஊருக்கு வெளியே தோப்புகளிலும் வயல்களிலும் ஓடி, நல்ல இடமாகப் பார்த்துப் பதுங்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான்.

எங்கேயாவது புதர் இருக்குமா— இடிந்த மண்டபம் இருக்குமா — சோலையப்பனின் கண்ணில்படாமல் தப்பித்துக்கொள்ள முடியுமா—என்ற ஒரே எண்ணத்தோடு, அச்சமும் நடுக்கமும், வறட்சியும் சூனியமும் மாறிமாறி வட்டமிடும் உள்ளத்தோடு அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

'அகோரமான இரத்த வெறியோடு ஓடி வரும் சோலையப்பன் கையில் அகப்படக்கூடாது! அகப்பட்டுவிட்டாலோ, அழிந்தேன்! அழிந்தேன்! சிக்கிவிட்டாலோ, செத்தேன்! செத்தேன்!' என்று அச்சப் புயல் அவன் அகத்தில் அடிக்கடி சீறியெழுந்தது.

அந்த அச்ச உணர்ச்சி பெருக்கெடுத்து தன் சதையும் எலும்பையும் தின்றுவிடுவதைப்போல அவனுக்குத் தோன்றியது. ஆகவே எப்படியாவது உயிர்தப்ப வேண்டுமே என்ற ஒரே நோக்கத்தோடு. மேடென்றும் பள்ளமென்றும், கல்லென்றும் முள்ளென்றும் பாராமல் ஓடினான்.

சோலையப்பனின் மனத்திலோ மிதமிஞ்சிய ஆத்திரமும் ஆவேசமும் கொதித்துக்கொண்டிருந்தன.

'வாளே இன்று உனக்குச்சரியான விருந்து! இரத்த விருந்து!' என்று வாளின் முனையைப் பார்த்து முணுமுணுத்தபடி, தூமகேதுவை அவன் துரத்திச் சென்றான்.

காலில் முள் தைத்து இரத்தம் கசிவதையும், விருப்பம்போல் அந்தக் காலை வேகமாக எடுத்துவைக்க முடியாததையும், அவன் மறந்தே போனான். அந்த நேரத்தில் அவனது இரண்டு கால்களும் வெட்டுண்டு கீழே விழுந்துவிட்டிருந்தால்கூட அவன் உருண்டுகொண்டே சென்று தூமகேதுவைப் பிடித்திருப்பான். அவ்வளவு ஆவேசம் அவன் உள்ளத்தில் நிறைந்து வழிந்துகொண்டிருந்தது.

இருவருக்கும் இடையே இருந்த தூரம், சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது, இதோ, இதோ இந்த ஆணவக்காரன் இன்னும் சிறிது நேரத்தில் சிக்கிவிடப் போகிறான் என்ற துடிதுடிப்பு, சோலையப்பனின் கால்களின் வேகத்தை அதிகமாக்கிற்று.

தூமகேதுவுக்கோ கால்களெல்லாம் அசந்துவிட்டன. மூச்சோ திணறியது. இதயமோ விம்மி வெடித்துவிடும்போல தோன்றியது. திறந்திருக்கும் வாயை மூடினாலோ, மூச்சு திக்குமுக்காடியது.

அவனது கண்களில் மருட்சி அதிகமாக, திகில் முகத்தில் பூரணமாகக் கவ்விக்கொண்டது.

எதிரே மயானம். அதைக் கடந்துவிட்டால், சிறியதொரு குன்று. அந்தக் குன்றின் அடிவாரத்தில் புதர்கள் ஏராளம். அங்கே ஏதாவது ஒரு புதரில் பதுங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு, அவன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான்.

மயானத்தில் அடியெடுத்துவைத்ததும், மனத்தில் எரிந்துகொண்டிருந்த கோபத்தீயின் ஜுவாலை இன்னும் அதிகமாகிவிட்டது.

'பொன்னையாவின் கல்ல[illegible] இருக்கும் மயானம்!' என்று நினைத்ததும், அவன் இதயம் புலியின் ஆக்கிரோசத்தைப் பெற்றது,

ஒரே தாவாகத் தாவிச் சென்று, தூமகேதுவின் முதுகில் ஓங்கி ஓர் அடி கொடுத்தான்.

'செத்தேன்!' என்று அலறிக்கொண்டே தூமகேது தரையில் குப்புற விழுந்தான்.

சோலையப்பன் தன் கையிலிருந்த வாளினால், அந்த உலுத்தமனக்காரனின் உடலில் ஓங்கி ஒரு குத்து குத்தினான்.

'அய்யோ? செத்தேன்! செத்தேன்! சோலையப்பா! என்னை மன்னித்துவிடு!'

இவ்வாறு தூமகேது கதறினான். கைகளை எடுத்து எடுத்துத் தொழுதான்.

'கருநாகப் பாம்பே! உன்னையா விடுவது? விட்டால் உயிரோடு. உன் விஷப் பற்களுக்கு இந்தப் பாண்டியநாடே பலியாக வேண்டியது தான்!' என்று கோபாவேசக் கொக்கரிப்போடு அவன் மார்பில் ஓங்கித் திரும்பவும் குத்தினான்.

(10-ம் பக்கம் பார்க்க)

அழகியும் அகத்தியனும்

துறவி

பண்டாரக் கிழத்துறவி; ஆனால் நூல்கள்
படித்தறிந்த பெருஞானி; அகத்தி யன்தன்
பெண்டாட்டி யாய்விதர்ப்ப நாட்டு மன்னன்
பெற்றமகள் லோபாமுத் திரைஎன் பாளை
கண்டவர்கள் வியக்குவண்ணம் மனைவி யாகக்
கல்யாணத் துணைவாழ்வில் மணந்து கொண்டான்
சண்டையிடும் படைமன்னன் மகளை அந்தச்
சந்யாசி உடன்வாழ அனுப்பி வைத்தான்

கொடிச்சாயல் காட்டுகின்ற அந்த மங்கை
குளிர்நிலவு முகச்சாயல் காட்டும் நங்கை
நடிக்கின்ற பூத்தமலர் இளமைத் தோட்டம்
நெஞ்சத்தை ஊடுருவும் பருவ மின்னல்
இடைதொட்டு அணைக்கின்ற போது நெஞ்சில்
எழும்காமத் தீயணைக்கும் தென்றல் காற்று!
மடிமீது அனுராகப் பாடல் சொல்ல
மோகனமாய் நிறைந்திருக்கும் கவித்தொ குப்பு!

மோகநிழல் ததும்புகின்ற விழியில் கண்ணீர்
முத்தணிந்து நடைதளர்ந்து வந்தாள் லோபா
மேகநிறக் குழல்மீது அணிந்தி ருந்த
மலர்க்குவியல் தாரையெங்கும் சிதற; ஞானி
போகத்திற்(கு) இனிமேல்நான் அடிமை, ஆனால்
புதுமங்கை எனைமணந்து கொண்ட ஆண்டித்
தேகத்தில் திரைவிழுந்த முதுமை, இந்தத்
துணைவாழ்வில் எனக்கேது இனிமை? கண்ணீர்

சமுத்திரத்தில் மிதக்கின்ற படகு, துன்பம்
சாகுபடி செய்கின்ற உழத்தி, நெஞ்சில்
சுமைமூடும் சுவைஓடும், நித்தம் நித்தம்
சோகமிகு அனல்மூச்சு வெடித்து விம்மும்
அமைதியற்றுத் துயருற்ற மனத்தில் பூக்கும்
ஆசைகளை உதிரவிட்டு வாழ வேண்டும்
உமியைப்போல் ஆகிவிட்டேன் வாலி பத்தில்
உபயோக மாகாத பொருளாய் ஆனேன்!

இகவாழ்வு சுகவாழ்வு இங்கே உள்ள
இனிமைகளை அனுபவித்து நுகர வேண்டும்
அகவுணர்வில் இப்படித்தான் நினைத்தி ருந்தேன்
ஆளந்த பருவத்தில் பூத்த போது
"புகைவாழ்வு உயிர்வாழ்வு துன்ப வாழ்வு
புலன்வாழ்வு" எனவேதாந் தம்ப டித்துச்
சகம்வெறுத்த சந்யாசி மனைவி யாகச்
சாத்திரத்தின் துணையோடு இணைத்து விட்டார்

அழுகின்றேன் துடிக்கின்றேன் அதனால் என்ன,
அந்தரங்க வேதனைகள் வடிந்தா போகும்?
எழுதிவைத்த ஆசைகளை அழித்து விட்டு
இனிவேறு வாழ்க்கையினைப் பயில வேண்டும்
மெழுகிவைத்த மேடையிலே வரைந்த கோலம்
மறைவதைப்போல், கற்பனைகள் அழிய வேண்டும்
இழவெடுத்த இல்லம்போல் மாறிப் போன
எனக்கினிமேல் எதிர்காலம் இருட்டுக் கோலம்!

பட்டத்துப் படைமன்னன் புதல்வி, செல்வப்
போகத்தில் திளைத்திருந்த செல்வி உள்ளம்
திட்டமிட்ட படியெல்லாம் வாழ்ந்து துன்பம்
தொடும் வாழ்வைத் தொட்டறியா அழகி முன்பு;
குட்டைமுனி வன்மனைவி யாக இன்று
கரம்பிடிக்க வைத்துவிட்டார்; அகழ்ந்தெடுத்து
நட்டுவிட்டார் பூங்கொடியைப் பாலை மண்ணில்
நாளைஅது வாடுமென்று அறிந்த போதும்!

உல்லாச மகிழ்ச்சியினை இழந்து போன
உள்ளத்தின் நெட்டுயிர்ப்பை மறைத்த வாறு
செல்வாக்கு இளவரசி சித்தி ரித்த
சிற்பம்போல் அலங்காரத் தோடு வந்து
சொல்வாக்குக் கிழஞானி மருங்கில் சென்றாள்
சிவந்தவிழி தனைத்தரைமேல் மேய விட்டு,
கல்லாதான் முன்வைத்த கவிதை நூல்போல்
கன்னிமயில் அகத்தியனின் அருகில் நின்றாள்.

கிழமனத்தில் சபலத்தை எழுப்பும் மங்கை
கவின்மேனி ஒப்பனையைக் கண்டு ஞானி
இழுக்காறு மனம்கொண்டான் தனுக்குற் றான்;நான்
இருக்கின்ற நிலைஎன்ன? இந்த நங்கை
அழகென்ன, இனிஎதற்கு அலங்கா ரங்கள்!
ஆபரண ஆடம்ப ரம்ஏன்? "இந்தக்
கொழுக்கொம்பில் படரவரும் கொடிக்குப் பூவின்
குவியல்ஏன்" எனத்துறவி நினைத்துக் கொண்டான்

துறவிக்குப் பத்தினியாய் ஆன பின்,பொன்
தொடர்பெதற்கு உடல்மீது? பட்டால் ஆன
சிறைஆடை இனிஎதற்கு? இக்கோ லத்தில்
சிங்கார இளமடந்தை இவள்என் னோடு
உறவாட ஆசிரமத் திற்கு வந்தால்
உடன்இருக்கும் வாலிபத்து இளைஞ ரெல்லாம்
பிறழ்ந்திடுவர் தருமத்தில் இவளை நோக்கி
பருவவிழி பார்வையினைத் திருப்பி வைத்து!

எனஇருட்டு நினைவுகளால் தவித்த ஞானி
இளவரசி யைப்பார்த்து அமைதி யாகத்
தனிவாழ்வை ஒதுக்கிவிட்டு என்ற னோடு
துணைவாழ்வை ஆரம்பிக் கின்றாய், உன்றன்
மனத்தைஇனி நீதிருப்பிக் கொள்ள வேண்டும்
மயக்குகின்ற அழகணியை வெறுக்க வேண்டும்
மணவாழ்க்கைப் புகுந்துவிட்ட உனக்கு இந்த
முனிவன்சொல் தான் வாழ்வின் எல்லைக் கோடு!

'அலங்கார அழகிகளைத் துறந்து விட்டு
ஆசிரம வாழ்வினிலே இயங்கு கின்ற
குலப்பெண்டிர் போல்துறவு ஆடை யோடு
குடிலுக்கு வரவேண்டும் எனைத் தொடர்ந்து
தொலைபட்டும் அரண்மனையின் ஆசை' என்று
தோகையிடம் கிழஞானி மொழிந்தான்! லோபா
புலமைமிக்க அகத்தியனின் சொல்லைக் கேட்டுப்
புழுக்கமனம் துடிதுடித்தாள், கலங்கிப் போனாள்!

தொடுவதற்கும் தொட்டணைத்துப் படுக்கை மீது
துணையோடு படுப்பதற்கும் மோக முத்தம்
இடுவதற்கும் உங்களோடு இணைந்து வாழ்ந்து
இருள்நேர இலக்கியத்தைப் படிப்ப தற்கும்
உடன்பட்ட வள்தான்நான், என்ற போதும்
உடைஅலங்கா ரத்தினைஏன் இழக்க வேண்டும்!
முடியாது ஒருநாளும் என்னால் உங்கள்
மறைவாழ்வில் ஒழுகுகின்ற நியதி யேற்க!

பருவப்பெண் நான்,எனக்கு எதற்கு இந்தப்
பண்டாரப் பரதேசிக் கோலம்! உங்கள்
விருப்பத்தை ஒருகாலும் ஏற்க மாட்டேன்
வனப்பிற்குத் திரைமூடி வைக்க மாட்டேன்
துருப்பிடித்த இரும்பாநான்! அல்ல அல்ல
தொடவிழையும் பொற்சிற்பம்! துறவுக் கோலம்
தரிப்பதற்கு முடியாது என்னால்' என்று
துணிவாக எதிர்வாதம் புரிந்தாள் லோபா!

வெகுண்டெழுந்தான் கிழத்துறவி லோபா சொன்ன
வார்த்தைகளைச் செவிமடுத்து; 'தாலி கட்டி
அகமனைவி யாய்ஆன வள்ம ணாளன்
ஆணைக்கு ஆட்படுதல் வேண்டும் இந்தத்
தகைசான்ற பண்பாட்டை ஆட்சே பித்துத்
தவறுதலோ அபச்சாரம்' என்று கண்கள்
புகையற்ற நெருப்பைப்போல் கனலச் சொன்னான்
பூம்பாவை மீதுவிழி நிறுத்தி வைத்தான்

தவத்துறவி கோபச்சொல் கேட்டு மன்னன்
திடுக்கிட்டான் அச்சத்தில் நடுங்கிப் போனான்
அவக்கேடு நிகழ்ந்திடுமோ முனிவன் கொண்ட
ஆத்திரத்தில் எனநடுங்கி மகளை நோக்கி
இவருக்கு நீமனைவி இனிமேல் வாழ்வில்
இவருரைக்கும் கட்டளையே உனது வேதம்
துறவாடை நீஉடுத்திக் கொண்டு காட்டுத்
துறவியைப்போல் இவர்பின்னே செல்க' என்றான்!

போகின்றேன் ஆசைகளை ஒதுக்கி, ஞானி
பத்தினியாய் ஆனதினால் தோல்வி யுற்று!
பாகத்தீ யில்எரியப் போகும் நெய்நான்,
எனக்கெதற்கு மணிவிளக்கின் மீது ஆசை?
ஆகட்டும், எனக்குமோர் வாய்ப்பு நேரும்
அப்போது நான்உம்மை பணிய வைத்துச்
சோகத்தைத் தவிர்த்திடுவேன்' என்று கூறிச்
சந்யாசி கோலத்தில் அவன்பின் சென்றாள்

காட்டுவழி பாதையிலே மலரைப் போன்ற
காலிரண்டும் கொப்பளிக்கப் பயணம் செய்தாள்
கூட்டாளி யாய்த்தனக்கு முன்னே போகும்
குறுமுனியைச் சபித்தபடி லோபா! அந்தக்
கோட்டைமகள் முரட்டாடை அணிந்தி ருந்த
காரணத்தால் மெல்லியப்பூ மேனி வாட
வீட்டினிலே சுவைத்திருந்த சுகத்தை எண்ணி
விம்மியெழும் வருத்தமொடு நடந்து சென்றாள்

இன்பங்கள் கொப்பளிக்கும் வாழ்வை எண்ணி
இங்கிதமாய்க் கனவுகளில் நீந்தி வந்த
தன்மனத்தில் கவிந்துவிட்ட சோகக் கோலம்
தருகின்ற ஆற்றாமை தாங்கி டாமல்
சன்மார்க்கச் சாத்திரத்தில் பழுத்த ஞானி
செல்கின்ற அடியொட்டி நடந்து சென்ற
சின்னஇடை முத்துநகை லோபா, ஆற்றில்
சிறுபொழுது நீராட வேண்டு மென்றாள்

பயணத்தை நிறுத்திவிட்டு அருகே ஓடும்
புனலாற்றில் குளிப்பதற்கு லோபா சென்றாள்
அயலினிலே யாருமில்லை என்ற போதும்
அழகியவள் தனித்திருக்க விடாமல், ஞானி
பயத்தோடு புதர்ஒன்றில் மறைந்தி ருந்து
பார்வையினால் பாவைக்கு வேலி இட்டான்
மயக்குகின்ற வாலிபத்தில் மலர்ந்த லோபா
மேலாடை தனைநீக்கி நதியில் வீழ்ந்தாள்.

நிருவாணத் தோற்றத்தில் அவளைக் கண்டு
நிலைத்தடுமா றிப்போனான் துறவி கண்ணைத்
திருப்பாமல் வேறெங்கும் ஆற்றில் நீந்தும்
தசைசிலையை வெறியோடு உற்றுப் பார்த்தான்
சரிகின்ற அறநெஞ்சைத் தூக்கி வைத்துச்
சரிசெய்ய முடியாத பலவீ னத்தில்
அருகினிலே உடைஉடுத்தும் பெண்ணை நோக்கி
ஆவேச உணர்வோடு நெருங்கிச் சென்றான்

மனச்சலனம் உண்டாக்கும் அழகி அந்த
மாமுனிவன் தன்அருகில் நின்று, காம
அனல்மூச்சு விடுகின்ற தவிப்பைக் கண்டும்
அறியாதாள் போல்,அவிழ்த்து அவிழ்த்துச் சேலை
தனைவேறு பலவிதமாய்க் கட்டிக் கட்டித்
துறவிநெஞ்சில் மோகத்தைத் தூண்டி விட்டாள்
அனைத்தறமும் கற்றறிந்த போதும் ஞானி
அற்பமனம் கொண்டிருக்கும் மனிதன் தானே!

கரம்பற்றி இழுத்தணைத்தார் அவளை. காமக்
கண்குறிப்பில் தன்மனத்தை விளக்கி, ஆனால்
நிருவாண உடம்போடு இருந்த லோபா
நளினமொடு அவர்அணைப்பை விலக்கிக் கொண்டு
திருத்தமுறச் சேலையினை அணிந்த வாறு
துறவியினை வெல்வதற்கு இதுவே நல்ல
தருணமெனக் கருதி உங்கள் மனைவி தான்நான்
தடையில்லை என்றாலும் துறவு பூண்ட

கோலத்தில் உடல்தீண்டி அனுப விக்க
காட்டாயம் இணங்கிடவே மாட்டேன், என்றன்
கோலமீது அப்படியே மாறிச் செல்வக்
கோமகளாய் நான்மீண்டும் வாழ வேண்டும்
நூலிடையைத் தொடுவதற்கு அப்ப றம்தான்
நான்உமக்கு அதிகாரம் அளிப்பேன் என்றாள்!
வாலைமகள் கட்டளைக்குப் பணிந்து ஞானி
வேறுவழி புறப்பட்டான் செல்வம் தேடி!

7-ம் பக்கத் தொடர்ச்சி

தூமகேதுவின் பெரிய உடல் புழுப்போல மண்ணிலே துடி துடித்தது. இரத்தம் பீறிட்டு வெளியே ஓடிவந்து, அந்த மயானத்தைச் செந்நிறமாக்கியது. உதடுகள் இரண்டு மூன்று முறைகள் துடித்து, நின்றுவிட்டன. கண்கள் நிலைத்து நின்றுவிட்டன.

'அறியாமைக்கு வெண் சாமரம் வீசியவனே! பாண்டிய நாட்டைப் பாழ்படுத்திக்கொண்டிருந்த வேடதாரியே! செத்தாயா? செத்தாயா?' என்று அவன் உடலைக் காலால் உதைத்துத் தள்ளினான் சோலையப்பன்.

தூமகேது பிணமாகி விட்டான் என்பதைக் கண்டதும், அவனது கண்களில் வெற்றியும் மகிழ்ச்சியும் சுடர்விட்டன.

தூமகேதுவின் உடலிலிருந்து கொட்டிய இரத்தத்தை இரு கைகளாலும் அள்ளி எடுத்துக்கொண்டு, அவன் பொன்னையாவின் கல்லறையை நோக்கி, பீடு நடை போட்டுச் சென்றான்.

கண்களில் நீர் கசிய' கைகளில் இரத்தம் வழிய அவன் கல்லறையின் அருகே வந்து ஒரு கணம் மௌனமாக நின்றான்.

'நான் வந்திருக்கிறேன் பொன்னையா! அன்பான நண்பா! ஆருயிர்த் தோழா! என் பொன்னையா. நான் வந்திருக்கிறேன்! கல்லறையில் தூங்கும் உன்னைத் தட்டியெழுப்ப அல்ல! வேண்டாம் என்றேனே— வேல் எடுத்தாயே — சிறைப்பட்டாயே சிங்கமே–மாண்டு மண்ணில் மறைந்தாயே மாணிக்கமே—என்று அறிவுரை புகல அல்ல! தமிழ் அன்னையின் அருமை மகனே, பகுத்தறிவுச் செம்மலே, பாண்டிய நாட்டின் செல்வமே, என் உள்ளத்தில் குடி புகுந்த உத்தமனே, அஞ்சா நெஞ்சனே, ஆற்றல் வீரனே என்றெல்லாம் கத்தியழ அல்ல! கண்ணீரால் உன் கல்லறையைக் கழுவ அல்ல! பொன்னையா நான் வந்திருக்கிறேன்! மல்லிகை மாலை உனக்குச் சூட்டி கைகூப்பித் தொழவும் — உன்னைக் கல்லறையில் சேர்த்த அந்தக் காதகனை—பாண்டிய நாட்டின் வைரியான அந்தத் தூமகேதுவை — வெட்டி வீழ்த்தி, அவனது இரத்தத்தைக் கொண்டு உனது கல்லறையைக் கழுவுகிறேன் என்று சபதம் எடுத்துக்கொள்ளவுமே வந்திருக்கிறேன்! கேள், நண்பனே, நன்றாகக் கேள். இதோ சபதம் எடுத்துக்கொள்கிறேன்! அந்தச் சண்டாளனை தூமகேதுவின் இரத்தத்தால், உன் கல்லறையைக் குளிப்பாட்டுகிறேன், பொன்னையா குளிப்பாட்டுகிறேன்!' என்று பொன்னையாவைக் கல்லறையில் அடைத்த அன்று, தான் கொட்டிய உணர்ச்சி வார்த்தைகளும், எடுத்துக்கொண்ட சபதமும் அவர் காதில் வந்து சுழன்றன.

சோலையப்பன் கண்களை மூடித் திறந்தான். பிறகு கல்லறையின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

'பொன்னையா, உன் நண்பன் சோலையப்பன் இதோ வந்திருக்கிறேன்! பார் நண்பா, பார்! செந்மிதழ்ச் சிங்கமே! சீர்திருந்த செம்

மலே! வஞ்சகனின் இரத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்! எந்தத் தூமகேது உன்னைப் பதைக்கப் பதைக்கக் கொன்றானோ — எந்தத் தூமகேது நயவஞ்சக முறைகளைக் கையாண்டு, தமிழின் சிறப்பையும் சிங்காரத்தையும், தமிழரின் பண்பையும், பகுத்தறிவையும், தமிழ் நிலத்தின் ஒழுக்கத்தையும் ஒற்றுமையையும் குலைத்து வந்தானோ — அதே தூமகேதுவை வெட்டி வீழ்த்தி. அவனது—இரத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் பொன்னையா, இதோ கைகளிலே கொண்டுவந்திருக்கிறேன்! உத்தமனே, என் உள்ளத்தில் நிறைந்தவனே என் சபதத்தை முடித்துவிட்டேன்! தூமகேதுவின் அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் ஒரு முடிவுகண்டுவிட்டேன். பொன்னையா, தூமகேதுவை மண்ணோடு மண்ணாக்கி விட்டேன்! மமதை சாய்ந்தது! மறத் தமிழனின் கொற்றம் நிலைத்தது என்று நெஞ்சிலே உணர்ச்சி பொங்கக் கூறிக்கொண்டே, இரத்தத்தைக் கல்லறை மீது சோலையப்பன் தடவினான்,

'கன்னித் தமிழின் காவலனே உனது கனவு நினைவாகப் போகிறது! எந்தக் குலசேகரனின்மீது நீ வேல் எறிந்தாயோ, எந்தக் குலசேகரன் உனக்கு மரண தண்டனை தந்தாரோ அதே குலசேகரன் இன்று உனது பாசறையில் வேல் பிடித்து நிற்கிறார்! வெற்றி! வெற்றி! பொன்னையா உனக்குப் பெரும் வெற்றி!' என்று கம்பீரமான குரலில் உரத்துக் கூறிக்கொண்டே எழுந்து நின்றான்.

'என் தங்கை அஞ்சலை! தாய் தந்தை இல்லாதவள், அவளைப் பாதுகாக்க வேண்டியது நண்பனை எனக்கு நீ செய்யவேண்டிய தனிப்பட்ட உதவியாகும். அவள் கண்ணீர் விட்டால், அதைவிட நீ எனக்குச்செய்யும் துரோகம் வேறொன்றுமில்லை!...' என்று பொன்னையா ஓலையில் எழுதியிருந்தது அவன் நினைவில் ஓடி வந்து நின்றது.

'கண்ணீர் மட்டுமல்ல, செந்நீரும் வடிக்கிறாளே அஞ்சலை!' என்று யாரோ தன் கன்னத்தில் அடித்துக் கூறுவதைப்போல, அவனுக்குத்தோன்றியது.

'அஞ்சலை! அஞ்சலை!' என்று கதறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு ஓட அடியெடுத்து வைத்தவன், தன்னை நோக்கி மாரிமுத்து ஓடிவருவதைக் கண்டதும், அப்படியே நின்றுவிட்டான்.

'இதோ பார் மாரிமுத்து இரத்தச் சேற்றில் பகைவன்!' என்று அருகே வந்த மாரிமுத்துவிடம் வீரத்தோடு கூறிவிட்டு அவன் சிரித்தான்.

'சிறையிலிருந்து என்னைத் தக்க நேரத்தில் அரசர் விடுவித்து தங்களிடம் அனுப்பாமலிருந்திருந்தால், இந்நேரம் பாண்டிய நாடே இந்தப் படுபாவியினால் படுசூரணமாகி விட்டிருக்குமே!' என்று சொல்லி மாரிமுத்து பெருமூச்சு விட்டான்.

'மாரிமுத்து, அஞ்சலை...'

'அரண்மனையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டோம்!'

இருவரும் அவ்விடத்தைவிட்டு, அரண்மனையை நோக்கி ஓடினார்கள்'

"அஞ்சலை! அஞ்சலை!" என்று துக்கத்தோடு அழைத்துக்கொண்டே, அவள் படுத்திருந்த கட்டிலின் அருகே சோலையப்பன் ஓடினான்.

அங்கே அஞ்சலை உயிருக்கு மன்றாடிக்கொண்டிருப்பதையும் — கட்டிலின் அருகே குலசேகரபாண்டியன், கனகசேனன், திருமேனி, செந்தாமரை, சிதாரி முதலியோர் கண் கலங்கி நின்றிருப்பதையும் கண்டதும் — திகைப்பும் திகிலும் அவன் உள்ளத்தைக் கசக்கின.

"அத்தான்!" என்று அஞ்சலை மெல்ல அழைத்தாள்.

"இதோ வந்திருக்கிறேன் அஞ்சலை வந்திருக்கிறேன்! தூமகேதுவின் இரத்தத்தோடு வந்திருக்கிறேன்!" என்று உணர்ச்சிமிக்க குரலில் கூறிக்கொண்டே இரத்தம் தோய்ந்த தன் கரங்களை அவளுக்குக்காட்டினான்.

நயவஞ்சகனின் குருதியைக் கண்டதும், அஞ்சலையின் கண்களில் அபூர்வமானதோர் 'ஒளி வீசியது அவள் ஒன்றும் பேசவில்லை. பேச விரும்பினால்கூட, அந்நிலையில் அவளால் பேச முடிந்திருக்காது.

கனகசேனனின் முகத்தைப் பரிவோடும் பாசத்தோடும் ஒரு முறை பார்த்துவிட்டு அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

'அய்யோ! அஞ்சலை! அஞ்சலை!' என்று கனகசேனன் கதறினான்.

அவனுக்குக்குலசேகரனும் சோலையப்பனும் எவ்வளவோ ஆறுதல் கூறிப்பார்த்தனர் — அவன் துக்கம் குறையவே இல்லை. மாறாக அந்தக் துக்கம் அதிகமாகி, அவனைப் பைத்தியக்காரனாகவே ஆக்கிவிட்டது.

"அஞ்சலை! இதோ பார் மஞ்சம் அதன்மீது மல்லிகை மலர் தூவியிருக்கிறது, பார்! வெட்கமா! வேல் விழியாளே வா! வா! அட அட, ஓடுகிறாயே? ஓடினால் மட்டும் உன்னை விட்டுவிடுவேனா? அஞ்சலை! அஞ்சலை!" என்று எந்நேரமும் மயானத்திலேயே பிதற்றிக்கொண்டிருந்தான்.

வைகை ஆற்றில் நீர் நிறைந்திருப்பதையும், அதன் கரைகளில் பூத்துச் சிரிக்கும் செடிகொடிகளையும், காய்த்துக் கனிந்து குலுங்கும் மரங்களையும் கண்டு கண்டு–பூரித்த மூன்றாம் பிறை, முழு நிலவாக மாறியது.

வைகைக்கரையில், வெண்ணிலவின் பால் ஒளியில், கையிலிருந்த அல்லி மலரைப் பார்த்தபடி ஒய்யாரமாகத் திருமேனி நின்றிருந்தாள். அந்த அல்லி மலரின் நீண்ட காம்பை, ஒரு கையால் சுற்றிக்கொண்டே ஆற்றில் இறங்கி, படகில் ஏறி குலசேகரனின் அருகே உட்கார்ந்தாள்.

படகு நகர்ந்ததும், அருகே அமர்ந்திருந்த அழகு ஓவியத்தின் தோள்களைக் குலசேகரன் தழுவினான்.

"அத்தான்!".

"திருமேனி?"

"இராசாதிராசசோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தால்..."

"படையெடுப்பானே—பதவி போய்விடுமோ என்ற அச்சம் சிறிதளவும் நாம் கொள்ளக்கூடாது. திருமேனி! நாம் எத்தனை ஆபத்துக்களைத் தாண்டியிருக்கிறோம்— எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்கிறோம் — இவையெல்லாம் எதற்காக? சிம்மாசனத்தில் ஒய்யாரமாக வீற்றிருக்கவேண்டும், அரண்மனையில் உல்லாச வாழ்வு வாழவேண்டும் என்ற ஆசையினால் தானே? ஆள்வதைவிட — அதற்காகப் பற்பல இன்னல்களைத் தாங்கிக்கொள்வதைவிட–அந்நிய கலாச்சாரம் தமிழரின் உள்ளத்தின்மீது படையெடுத்திருக்கும் இத் தருணத்தில், அறிவுப் பிரசாரம் செய்வது எவ்வளவோ மேலானது — நாட்டிற்கு மிகமிக அவசியமாகத் தேவையானது! திருமேனி! போரில் நான் வெற்றியடைந்தாலும் அதிக நாட்களுக்கு மன்னனாக இருக்கப்போவதில்லை! என் சகோதரன் வீரபாண்டியனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, மக்கள் உள்ளத்தைச் செப்பனிடும் பணியில் ஈடுபடப்போகிறேன்! செங்கோல் கையில் இருப்பதைவிட, திருக்குறள் கையில் தவழுவதையே நான் பெருமை என்று நினைக்கிறேன்! ஆட்சியைப் பரப்புவதைவிட, குறள் நெறியைப் பரப்புவதையே வீரம் என்று நான் நினைக்கிறேன்! அப்பணியே சிறந்ததென்றும் அவசியமானதென்றும் நான் நம்புகிறேன்! மதங்களே இல்லாத தமிழ் நிலத்தை—பகுத்தறிவு ஒளிவீசும் பைந்தமிழ் நிலத்தை— காண வேண்டுமென்பதே என் இலட்சியம்!"

"அரண்மனையில் உலவுவதைவிட ஆலமரத்தடியில் இருந்து அறிவுப் பிரசாரம் செய்வதையே நானும் பெரிய காரியம், பெருமைக்குரிய செயல் என்று மதிக்கிறேன், அத்தான்!" என்று புன்னகையோடு திருமேனி, பாண்டியனின் பரந்த மார்பில் சாய்ந்தாள்.

அப்போழுது இனிய ஓர் இசை அவர்களின் காதில்வந்து பாயவே, இருவரும் நிமிர்ந்து உட்கார்ந்தனர்.

"அதோ பார், திருமேனி!"

"எங்கே, அத்தான்?"

"அதோ!" என்று குலசேகரன் சுட்டிக்காட்டிய திசையில் திருமேனி பார்வையைச் செலுத்தினாள்.

வைகையின்அக்கரையில்ஆனந்தமாக பாடியபடி அமர்ந்திருந்தாள், செந்தாமரை.

அந்தப் பசும்பொன் மேனியாளின் அருகே நின்றிருந்த சோலையப்பன், சிரித்தபடி அவளது வளைக்கரத்தைப்பற்றியிழுத்தான்.

அந்தக் காதற் காட்சியைவிட, செந்தாமரையின் கற்கண்டு குரலில் தெறித்த கவிதையின் பொருளே, பாண்டியனையும், திருமேனியையும் கவர்ந்தது.

"முந்திய நாளினில்
அறிவும் இலாது
மொய்த்த நன் மனிதராம்
புதுப் புனல்மீது
செந்தாமரைக்காடு பூத்ததுபோலே
செழித்த என் தமிழே
ஒளியே வாழி!"

செந்தாமரையின் இசை காற்றிலே மிதந்து வந்தது.

"முற்றும்"

6-ம் பக்கத் தொடர்ச்சி

பார். நூல் நிலையம் மூடும் முன்பே நான் என் இடத்தைவிட்டு எழுந்து என் சேலைத் தலைப்பை சரிசெய்து கொண்டு நின்று அவர் நாம் புறப்படுவதைக் கவனிக்கிறாரா என்று பார்ப்பேன். அவர் ஆழ்ந்து படித்துக் கொண்டேயிருப்பார். அவருக்கு நாம் வெளியில் போவதை குறிப்பால் உணர்த்த ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு அவரின் கவனத்தை நம் பக்கம் திருப்பவேண்டும் என்ற நினைப்போடு அவரைப் பார்ப்பேன். ஆனால், அவரின் அமைதியான முகத்தை அப்படியே பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டும் என நினைத்து ரசித்தபடி இருப்பேன், மற்றவர்கள் நம்மை கவனித்துவிடப் போகிறார்கள் என்ற எண்ணம் வந்ததும் ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு ஒன்றுமறியாதவளைப்போல, அவரைப் பார்க்காததுபோல தயங்கித் தயங்கி என் எண்ணத்தை அவரிடம் விட்டுவிட்டு வெற்றுடலாக நான் நடந்து செல்வேன். அவரோ என்னைத் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பார். இப்போது நான் நூல் நிலையம் போகிறேன் படிப்பதற்கல்ல. அவரை நாடி அவர் அங்கு தென்படுவாரா என்றுதான், அங்கு ஏமாற்றம்தான் பதிலாக மிஞ்சும். நூலகத்திலிருந்து திரும்பிவரும் போது அவர் என் பின்னாலேயே தொடர்வதுபோன்ற பிரமை. திரும்பித்திரும்பிப் பார்ப்பேன். அவர் இருக்கமாட்டார். என் நெஞ்சம் மிகவும் வேதனைப்படும். வழக்கமாக நூல்நிலைய வாயிற்படியில் வந்து நிற்பேன். வழக்கமாக அப்போதெல்லாம் அங்குதான் நான் நிற்பேன். நான் நின்றதும் என்ன நிர்மலா புத்தகம் ஒன்றும் சுவையில்லைபோலதெரிகிறது என்பார். அருகில் வந்து, ஆமாம், உங்களிடம் பேசுவதில்தான் சுவை. அது தப்பா என்று நான் மனங்குளிர எத்தனையோ முறை சொல்லியுள்ளேன் அப்போதெல்லாம். ஆனால், இன்று அதே வாயிற்படி அவரில்லாமல்...அந்த இடம் மயானம்போலல்லவா தோன்றுகிறது.

கடற்கரையில் வழக்கமாக நானும் அவரும் அமரும் இடத்திற்குப் போவேன். அவர் அமர்ந்த இடத்தில் அவர் இருப்பது போன்று கற்பனை செய்துகொண்டு அமர்வேன். யாருடன் பேச? எதைபேச? இதை நினைக்கும் போது என் கண்களிலிருந்து தானாகவே நீர் வழியும். அழுகின்ற நெஞ்சத்திற்கு அமைதிதேட அந்த இடத்தைவிட்டு பஸ் ஸ்டாப்பிற்கு வருவேன். அங்கே வெள்ளைச் சட்டையணிந்து வேறு யாராவது நின்றிருந்தால்கூட அவர்தான் என நினைத்து கால் புதைந்து போகும். அந்த கடற்கரை மண்ணில்கூட என் நடையை முயன்று சற்று வேகமாக்குவேன். ஆனால் கிட்டே நெருங்க நெருங்க பஸ் ஸ்டாப்பில் நிற்கும் உருவம் அவரில்லை என்ற உணர்வு ஏற்படும். உடனே என் கால நடக்க மறுக்கும், பஸ் ஸ்டாப்பை அடைந்தவுடன் பஸ்ஸில் ஏறும்போது அவர் எனக்குப் பின்னால் நின்று கொண்டு இருப்பது போன்ற உணர்வு. அப்போதெல்லாம் பார்த்தது போலவே இப்போதும் பார்த்து ஒவ்வொரு முறையும் பரிதாபத்துக்குள்ளாகிறேன். ராஜா அண்ணமலைபுரம் ஒஷியானிக் ஒட்டல் ஸ்டாப்பை நெருங்கும்போது இந்த பஸ் அப்படியே ஆகாய விமானம்போல பறந்து அடையாற்றை அடையக் கூடாதா? என்ற எண்ணம் வரும் எனக்கு. அந்தஸ்டாப்பில் பஸ் நின்றதும் என் இதயமே நின்றுவிடுவது போன்ற பிரமை.

அவர் என் நெஞ்சில் இல்லை என்று என்னால் சொல்லவே முடியாது. அங்கிங்கென்னாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கிறான் ஆண்டவன் என்று மதவாதிகள் சொல்வார்களே, அதைப்போல அவர் நேரில்தான் இல்லையே தவிர என் நெஞ்சம் முழுமையிலும் அவர்தானிருக்கிறார். என் எண்ணம் முழுமையும் அவராகத்தான் இருக்கிறார். என் பேச்சு......மூச்சு......உடல்,....உயிர் அத்தனையிலும் அவரே.

நேரில் இல்லாதவர் நினைவில் நிற்பதில்லை என்பது காதல் உலகிற்குப் பொருந்தாததுதான். நான் இதை இப்போது ஒப்புக்கொள்கிறேன். இதை யாரிடம் ஒப்புக்கொள்வது, அவர்தான் எங்கோ.........ஆனால் கருத்தில் நிலையாக நின்றுவிட்டாரே அதுவே போதும்!

❀

முக்கிய அறிவிப்பு

"காஞ்சி" அலுவலகத்தோடு, அஞ்சல் தொடர்புகொள்வோர், சின்ன காஞ்சிபுரம் என்பதற்குப் பதிலாக,

காஞ்சிபுரம்—3

என்ற விலாசமிட்டு எழுத வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'
காஞ்சிபுரம்–3.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அண்ணு அவர்கள் திறந்துவைத்ததைப் போன்ற தாம் போதிதான் அது!

பாட்டாளி வணங்கி விடைபெறுகிருர். எங்கள் பயணமும் தொடர்கிறது!

சேலம் மாவட்டத்திலிருந்து மீண்டேன் பழைய சீவரத்துக்கு.

அதற்குள் அண்ணு அவர்கள் பாதையைத் திறந்து வைத்துவிட்டுப் பேசத் தொடங்கிவிடுகிருர்கள்:

'இப்பாலம் அமைக்கப்பட்டதால், இந்தப் பகுதியிலுள்ள மக்கள் அக்கரைப் பகுதிக்குச் செல்லவும் அக்கரையிலுள்ள மக்கள் சுலபமாக இங்கு வரவும் நெடுங்காலமாக எதிர் பார்த்திருந்தஏற்றம் இன்றுகிடைத்திருக்கிறது. இதுவரை இந்த ஆற்றைக்கடக்கத் தொல்லைப் பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு ஒரு ஆறுதல்—ஒரு மகிழ்ச்சி கிடைத்திருக்கிறது,'

தொடர்ந்து அண்ணு அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நான், பாலம் கட்டப்பட்டிருந்தும், அதனைக் கடக்கப் பட்ட பாட்டை எண்ணி, அது இல்லாமலிருந்த இந்தப் பகுதி மக்கள் எவ்வளவு சங்கடப்பட்டிருப்பார்கள் என்ற வகையில் சிந்தித்துக்கொண்டிருந்தேன்! என் சிந்தனையைத் தடுத்து நிறுத்தி—

''பாதை இல்லாத கிராமம் — பள்ளிக்கூடம் இல்லாத கிராமம்—மருத்துவமனை இல்லாத கிராமம் — போக்குவரத்து வசதி இல்லாத கிராமம் — படிப்பகம் இல்லாத கிராமம் என்று இனி எதுவும் இல்லாத கிராமம் இல்லை என்ற நோக்கத்தில் தமிழகஅரசு வேகமாகத் தன் நடையை முடுக்கி இருக்கிறது.''

என்று அறிஞர் அண்ணு அவர்கள் பேசியது செந்தேனுக இனித்தது!

திறந்துவைத்த தாம்போதிபாலம் வழியாக அக்கரை சென்று, அங்கே திருமுக்கூடல் ஊராட்சி மன்றம் அளித்த சிறப்பான வரவேற்பைப் பெற்றுக்கொண்டு திரும்பினுர்கள்!

காஞ்சிபுரம் மக்கள், 1962ல் பேரறிஞர் அவர்களின்மீதான பேரன்பை சற்று திசைதிருப்பி விட்டுவிட்டாலும், 1967க்குப் பின்னர் முழுச் சொந்தம் கொண்டாடுகிருர்களே, அதற்கு எடுத்துக்காட்டாக அன்று நாள்பூராவும் நிகழ்ச்சிகள்! பல்வேறு நிகழ்ச்சிகள்!

ஒரு வங்கியில் தலைவர் படத் திறப்பு விழா! மின்ஞெளிப் பலகைத் திறப்பு விழா இன்னெரு வங்கியில்!

நிலம் இல்லாத ஏழை எளியோர்க்குப் பட்டா வழங்கு விழா ஒரு பகுதியில்.

இடையே விவசாயக் கருத்தரங்கு. விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களும் சி. சிட்டிபாபு எம்.பி. அவர்களும், திருத்தணி எம். எல். ஏ. விநயகம் அவர்களும் பல்வேறுபட்ட தொகுதி சட்டமன்ற பாராளு மன்ற, உறுப்பினர்களும் கலந்துகொண்

கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன சிறந்த முறையில் நடந்துவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி 8

தாராபுரம்.

கோவை மாவட்டம்

டார்கள். ஆயிரக்கணக்கான உழவர் பெருமக்கள், விவசாயப் பெருங்குடியினர்!

திட்டக்குழுத் துணைத்தலைவர் அவர்களது திட்டவட்டமான அறிவிப்புக்குப் பிறகும், மத்திய உணவு அமைச்சர் திரு. செகஜீவன்ராம் அவர்களது சீரிய விளக்கத்துக்கு அப்புறமும் நெல்கொள்முதல் விலையை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று தொடங்கிப் பேசினார்!

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்துகொண்ட கருத்தரங்கு அல்லவா அது! திரு. விநாயகம் அவர்களுக்குப் படும்படியாகவே பதில் சொன்னார்கள்! குட்டுதான் என்றாலும் மோதிரக் கையால்பட்ட குட்டு அது! வலிக்காது! பெருமை வேறு!!

"மத்திய உணவமைச்சர் செகசீவன் ராமே சொல்லிவிட்டாரே! இனிஏன் உயர்த்த வேண்டும் என்று கேட்கிறீர்கள் என்று நான் கேட்கமாட்டேன்!

ஆந்திரா கொள்முதல் விலையைஉயர்த்தி இருக்கிறது. கேரளம், மே. வங்கம், மராட்டிரம் முதலான மாநிலங்களுக்கு ஆந்திரம் அதிக விலைக்கு விற்கிறது. அதனால் அப்படிச் செய்ய முடிகிறது.

தமிழகம், ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தைச் செயல் படுத்துகிறது. நெல் விலை அதிகரித்தால் இவர்களால் படி அரிசி போட முடியாது — அதனால் ஆட்சியை விட்டுவிட்டுப் போய்விடுவார்கள் என்று காங்கிரஸ் நினைக்கிறது.

20 சதவீதத்தை மட்டுமே கொள்முதல் செய்து, 80 சதவீதத்தை உற்பத்தியாளர்கள் இஷ்ட விலைக்கு விற்க அனுமதித்திருக்கிறது அரசு.

நாங்கள் படி அரிசித் திட்டத்தை விட்டு விட்டால், எங்களுக்குப் பிறகு ஆட்சிக்கு யார் வந்தாலும், அவர்களும் படி அரிசி போட வில்லையென்றால் அவர்கள் தலை தப்பாது! அவர்களும் போட்டே தீரவேண்டும்!

விவசாயச் செலவு கூடியுள்ளதாகக் கூறுகிறார்கள். உர விலை உயர்ந்ததால் அப்படி செலவு கூடியுள்ளது. இதனைக் குறைக்க மத்திய அரசுடன் போராடிக்கொண்டிருக்கிறோம். விவசாயச் செலவையும், இப்போது அறிமுகப்படுத்தியுள்ள புதிய ரக நெல் விளைச்சலால் ஏற்பட்டுள்ள நல்ல பலனையும் ஒப்பு நோக்கிப் பார்த்துச் சொல்லுங்கள்.

10 மூட்டைகள் விளைந்த இடத்தில் இப்போது 30 மூட்டைகள் விளைகிறதல்லவா!

எனவே, வரவேண்டிய ஆதாயம் வருகிறதா இல்லையா? ஆதாயத்தில் வேண்டுமானால் துண்டு விழலாம்–ஆதாயமே இல்லை என்று சொல்ல முடியுமா?"

அறிஞர் அண்ணா அவர்கள் தந்த இந்த விளக்கத்தை, திட்டக்குழுத் துணைத் தலைவரும், மத்திய உணவு அமைச்சரும் எடுத்துக்காட்டியதற்கு அப்புறமும், கொள்முதல் விலையை 'உடும்புப் பிடி'யாகப் பற்றிக்கொண்டிருக்கும் காமராசருக்கும், பக்தவத்சலத்துக்கும், கருத்திருமனுக்கும் தாமே எடுத்துக்கூறி திருத்த முயலுவோம் என்ற எண்ணம் இதயத்திலேற்பட்டிருக்க வேண்டும், திரு. விநாயகம் அவர்களுக்கு. புன்னகை மலர்ந்தது அவரது முகத்தில்!

நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டுமே என்று விட்டுவிடவில்லை. செங்கை மாவட்டக் கலெக்டர் லெட்சுமிகாந்தம் பாரதி அவர்கள் சீரணியை சிறப்புற அமைத்துக் காட்டி—அணி வகுப்பு நடத்தி வைத்து அறிஞர் தம் இதயம் பூரிக்குமாறு செய்தார்கள்!

சீரணிப்படையில் கழகத்தவரைக் காட்டிலும் கழகம் அல்லாத பிற கட்சியினர் அதிகமாக ஈடுபட வேண்டும் என்பது அண்ணாஅவர்களது பெருவேட்கை.

அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தார் கலெக்டர்.

இந்தத் திட்டத்தை முதன் முதல் அண்ணா அவர்கள் சட்ட மன்றத்தில் அறிமுகப்படுத்தியபோது, தோள் புடைக்க—மார்பு விம்ம தினவெடுத்த தீரத்தோடு எழுந்து 'இது சீனாவின் செங்காவல்படை!' என்றவர் திரு. விநாயகம் அவர்கள். அவரும் கலந்துகொண்டார் இதன் தொடக்க விழாவில்! பேசவும் செய்தார்!

"எனக்கோ, காங்கிரசுக்கோ சீரணி பற்றி கருத்துவேறுபாடு கிடையாது"—என்று!

சென்னை நகரத்துச் சீரணிப்படையின் சேவைகளைக் கண்டார்! சிந்தை மகிழ்ந்தார்! கருத்தை மாற்றிக் கொண்டு, காங்கிரசுக்கும் இடம் தாருங்கள்! நிறைய தாருங்கள்!! என்றார். பெருந்தன்மை இருந்தது அந்த பேச்சில்!!

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களது பேச்சில் தம்மையே மறந்துவிடும் இயல்பு, திரு. விநாயகம் அவர்களுக்கு இயல்பாயமைந்தது! பிற்பகல்

லோகியா மறைவு

கடந்த கிழமை இறுதியில் சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. டாக்டர் ராம்மனோகர் லோகியா காலமானார்.

டாக்டர் லோகியா ஒரு துணிச்சல்காரர். அழுத்தமான கொள்கைப் பற்றுக் காரணமாக காங்கிரசிலிருந்து வெளியேறியவர். தீவிர சோஷலிசவாதி. தம் கட்சி ஊழியர்கள் குறுகிய நோக்கு இன்றி அனைத்து அரசியல் கட்சிபற்றிய தெளிந்த ஞானத்தோடு இருக்கவேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டு, செயல்படுத்தியவர்.

இவரதுமறைவு கட்சிஊழியர்களுக்கும்பார்லிமெண்டரி ஜனநாயகக் கோட்பாட்டுக்கும் ஒரு பேரிழப்பேயாகும்.

உண்ட விருந்து போதவில்லை! அறிவுப் பசிக்கு முடிவில்லை அல்லவா—தீராத பசியாயிற்றே அது! அண்ணாவின் வாயைக் கிளறிவிட நினைத்து கழகத்தார்தான அதிகமாக சீரணியில் இருக்கிறார்கள்' என்று சொல்லி வைத்தார்!

"இல்லை அணி வகுப்பைப் பார்த்தேன். எனக்கு அறிமுகமான முகங்கள் மிகக் குறைந்ததுதான்! புதிய முகங்களே பலவாக இருக்கக் கண்டேன்!"

என்றார்கள் அண்ணா அவர்கள்! தொடர்ந்து பேசுகையில்,

"கழகம் நினைத்தால் இதனினும் பெரிய கூட்டத்தை, முற்றிலும் கழகத்தவரே அடங்கிய அணியைக் கூட்டி இருக்க முடியும். இந்த சீரணி தமிழக அரசின் அமைபபாகும். அதனால் கட்சிச் சார்பின்றி அனைவரும் ஈடுபடவேண்டும்;

முதலில் ஆர்வத்தோடு தொடங்கிவிட்டுப் பின்னால் துவண்டுவிடாமல் தொடர்ந்து பொதுப்பணியில் ஈடுபடவேண்டும்.

எதற்கெடுத்தாலும் அரசாங்க உதவியை எதிர்பார்க்காமல், இந்த அணியின் உதவியோடு செயல்களைச் சீராக முடித்துக்கொள்ள வேண்டும்."

என்றார்கள்! விநாயகத்துக்கு அண்ணா அவர்கள் பதில் சொல்லவில்லை யென்றால் இரவு பசி அடங்காது என்பதும் முதலமைச்சருக்குத் தெரியுமே! பதில் சொன்னார்கள்!

'திரு. விநாயகம் அவர்களே விரும்பினால் செங்கை மாவட்டத்துச் சீரணிப்படைக்குத் தலைமை தாங்கட்டும்; அவரது கட்சியினரையும் அவர் விரும்பும் அளவுக்குச் சேர்த்துக் கொள்ளட்டும்."

என்றார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களை இதோடு காஞ்சிபுரம் விட்டுவிடவில்லை. காஞ்சிபுரம் அரிமா சங்கத்தினரின் அன்பு வரவேற்பு! இறுதி நிகழ்ச்சியாக!

தேர்தலுக்கு முன்னும் பின்னும் அண்ணா அவர்களது தொடர் நிகழ்ச்சிகளைக் காண்கிறேன்! நீடித்த ஆயுளும், நோய் நொடியற்ற உடல் வன்மையும் குன்றாமல் குறையாமலிருக்க, நீடித்த சேவையை நாம் பெற்றுக்கொண்டே இருக்க, அண்ணா அவர்களுக்குத் தரும் அன்புத் தொல்லையைக் குறைத்துக்கொள்வது நம் அனைவருடைய கடமையல்லவா!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்.

போதையிலில்லை!

"மக்கள், போதையுள்ளவர்கள்; விவரம் அறியாதவர்கள்' என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள்! மக்கள், விவரம் அறிந்தவர்கள்; எல்லாம் தெரிந்தவர்கள்' என்று நாம் நினைக்கிறோம்!

"மக்கள், இழந்தவன் பக்கத்தில் சென்றுவிடுபவர்கள்; எந்தப் பக்கத்தில் காற்று அடிக்கிறதோ அங்கு சாய்ந்துவிடுபவர்கள்' என்று நம்பிக்கொண்டிருக்கிற அவர்களின் எண்ணத்தை மாற்றும் தேர்தல், இந்த இடைத்தேர்தல்!

'தமிழகத்தில் காங்கிரசைத் தோற்கடித்தது போதையால்தான் என்பதை ஒப்புக்கு வைத்துக்கொண்டு பார்த்தாலும், கேரளத்தில் காங்கிரசு தோற்றதே—எதனால்? பாபு இராசேந்திர பிரசாத் பிறந்த பீகாரில் காங்கிரசுத் தோற்றதே—எதனால்? சுபாஷ் சந்திர போசைத் தொட்டிலிட்டு வளர்த்த வங்கத்தில் காங்கிரசுத் தோற்றதே — எதனால்? வெள்ளையனின் ஈட்டி முனைக்கு மார்பு காட்டிய லாலா லஜபதி ராய் தோன்றிய பாஞ்சாலத்தில் காங்கிரசுத் தோற்றதே—எதனால்? காங்கிரசாராலேயே உருவாக்கப்பட்ட அரியானா மாநிலத்தில் காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்? 'இந்தியாவின் இதயம்' என்றும் 'பண்டித ஜவகர்லால் நேரு—மோதிலால் நேரு—லால்பகதூர் சாஸ்திரி—இந்திரா காந்தி ஆகியோர் தோன்றிய மாநிலம்' என்றும், முன்பொரு காலத்தில். 'சுயராஜ்யத்தின் திறவுகோல்' என்றும் வர்ணிக்கப்பட்ட உத்தரப் பிரதேசத்திலேயே காங்கிரசு தோல்வி கண்டதே—எதனால்?

'என்பேரிலுள்ள கோபத்தினால், 'இந்தியாவின் பெரும் பகுதி மக்கள் போதையில் உள்ளவர்கள்' என்று பேசுவது? அப்படி ஒரு நாட்டில் காங்கிரசாரின் இருபதாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், எல்லோரும் போதை உள்ளவர்களாக — தெளிவில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலேயே காங்கிரசார் இருப்பதற்கு அருகதையற்றவர்கள் என்று பொருள்!

"இப்படி, நாட்டு மக்களை இழிவுபடுத்துகிற எதேச்சாதிகார இயல்பு — அரசியல் ஆணவம் காங்கிரசுக்காரர்களிடம் இன்னும் போகவில்லை என்பதைத்தான் இந்தப் பேச்சு காட்டுகிறது!

'மாபெரும் தேர்தல் நடந்து, அவர்கள் அமர்ந்திருந்த அரசுக் கட்டிலை உருட்டிவிட்ட பிறகும், அடக்கத்துடன் நடந்துகொள்ளும் பண்பு இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்பதைத் தான் அவர்கள் பேச்சு காட்டுகிறது!'

23.10.67

பொதுத் தேர்தலின்போது கழகத்திற்கு ஆதரவு தந்த நீங்கள், மீண்டும் அந்த ஆதரவைத் தருவதன் மூலம் எங்கள் மீதுள்ள அன்பை நீங்கள் நிலைநாட்ட வேண்டும்!

'புதிய அரசை—அதன் சாதனைகளை நீங்கள் வரவேற்கிறீர்கள்' என்ற உண்மையை இந்திய முழுமைக்கும் அறிவிக்க இந்த இடைத் தேர்தல் பயன்பட விருக்கிறது!

இது வெறும் இடைத் தேர்தல் அல்ல—புதிய அரசுக்கு ஆதரவும், துணையும் இருப்பதை வெளிக்காட்டும் தேர்தல்!

இந்த இடைத் தேர்தலில் மாறனை வெற்றி பெறச் செய்வதன் மூலம், 'பொதுத் தேர்தல் முடிவு நியாயமான முடிவு; தேவையான முடிவு' என்பதை நிலைநாட்டுகிறீர்கள்!

'இந்தப் புதிய அரசு நடக்கும் பாதை சரியானது; இப்படி 'அரசு நடத்துவதைத்தான் விரும்புகிறோம்' என்பதை வெளிப்படுத்தும் தேர்தல் இது!

பக்தவத்சலம் அவர்கள் இப்போதெல்லாம் மாலை நேரக் கூட்டங்களில், விசித்திரமான விளக்கங்களைத் தந்துகொண்டிருக்கிறார்; 'பொதுத் தேர்தலின்போது 138 தி. மு. கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும், 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தி. மு. கழகம் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒரு போதையில்தான்; ஆனால் இப்போது அந்தப் போதை தெளிந்துவிட்டது; தி. மு. கழகத்திற்கு மக்கள் ஓட்டுப் போடமாட்டார்கள்' என்று பக்தவத்சலம் கூறியிருக்கிறார்!

அதற்குப் பதில் கூறும் முறையில். 'நாங்கள் முன்பு ஓட்டுப் போட்டது போதையில் அல்ல; விவரம் அறிந்துதான் போட்டிருக்கிறோம்' என்று கூறுகிற முறையில் மக்கள் இந்த இடைத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு வாக்களிக்கவேண்டும்.

'மக்கள், போதையில் வாக்களித்தார்கள்' என்று கூறி மக்களை, 'குடிகாரர்கள் என்று மறைமுகமாக ஏசியவர்களைக் கண்டிக்கும் முறையில் தி. மு, கழகத்திற்கு ஓட்டளிக்க வேண்டும்.

நவம்பர் 7ந்தேதியன்று ஓட்டுச் சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் முத்திரையிடும்போது, 'நாங்கள் போதையில் இல்லை' என்று கூறி வாக்களிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்."

❋

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.